

# எந்த கோஷ்டி முந்துகிறது?

ஆ. தமிழ்ச்சுடர்

***த**மிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பில், கடந்த சில மாதங்களாக இளைஞர் காங்கிரஸிற்கும், தாய் கழகத்திற்கும் தீவிரமான உறுப்பினர் சேர்க்கை நடைபெற்று வந்தது. இதில் வாசன் அணி, தங்கபாலு அணி, சிதம்பரம் அணி என்று பல அணிகளும் தீவிரமாகக் களம் இறங்கி உறுப்பினர் சேர்க்கையை நடத்தின.*

*ஆனால் இளைஞர் காங்கிரஸில் 90 சதவிகிதம் முறை கேடு இல்லாமல் உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றதாகவும், தாய் கழகத்துக்கு சேர்த்த உறுப்பினர் பட்டியலில் நிறைய கோல்மால்கள் அரங்கேறியதாகவும் காங்கிரஸ் கட்சியினரே ஒப்புதல் வாக்கு மூலம் தருகின்றனர். இந்நிலையில் யாருடைய அணிக்கு நிறைய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர் என்று விசாரித்தோம்.*

## கடலூர் மாவட்டம்

கடலூர் மாவட்டத்தில் இளைஞர் காங்கிரஸிற்கு சுமார் 62,000 பேரும், தாய் கழகத்துக்கு அதே அளவில் உறுப்பினர் சேர்க்கையும் நடந்திருக்கிறதாம். இதில் சரிபாதியாக கடலூர் எம்.பி. அழகிரி ஆதரவாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். மற்றவர்களை மாவட்டத் தலைவர் நெடுஞ்செழியன் சேர்த்திருக்கிறார். அழகிரி சிதம்பரம் அணியைச் சேர்ந்தவர். நெடுஞ்செழியன் வாசன் அணியில் இருக்கிறார்.

## விழுப்புரம் மாவட்டம்

இங்கே வடக்கு, தெற்கு ஆகிய இரண்டு மாவட்டங்களையும் சேர்த்து இளைஞர் காங்கிரஸிற்கும், தாய் கழகத்திற்கும் தலா 70 ஆயிரம் என்ற கணக்கில் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். வாசன் அணியைச் சேர்ந்த ரிஷிவந்தியம் எம்.எல்.ஏ. சிவராஜ்தான் அதிக உறுப்பினர்களை சேர்த்துள்ளார். மேல்மலையனூர் முன்னாள் எம்.எல்.ஏ. ஜானகிராமன், சோழன், சிவா போன்றோர் சிதம்பரம் அணியைச் சேர்ந்தவர்கள். இவர்களும் கணிசமான உறுப்பினர் சேர்க்கையில் ஈடுபட்டுள்ளனர். மாநிலத் தலைவர் தங்கபாலுவின் ஆதரவாளரான மாவட்டப் பொறுப்பாளர் தனுசு தனியாக உறுப்பினர் சேர்க்கையை நடத்தியுள்ளார். ஆனால், இந்த மாவட்டத்தில் 90 சதவிகித உறுப்பினர்களை சேர்த்து வாசன் அணியே முன்னணியில் இருக்கிறது.

## திருவண்ணாமலை மாவட்டம்

செங்கம் குமார்தான் உறுப்பினர் சேர்க்கையில் முதலிடம் வகிக்கிறார். தாய் கழகத்துக்கு 13,000 உறுப்பினர்களையும், இளைஞர் காங்கிரஸிற்கு 15,400 உறுப்பினர்களையும் சேர்த்து முதலிடம் பிடித்த இவர், 'யார் கோஷ்டியிலும் இனி இருக்க மாட்டேன்' என்று சொல்லி தனியாக லாபி பண்ணிக் கொண்டிருக்கிறார். இவருக்கு அடுத்தபடியாக, வாசன் அணியில் முன்னாள் எம்.எம்.ஏ. மணிவர்மா உறுப்பினர்கள் சேர்ப்பில் இரண்டாம் இடத்தில் இருக்கிறார். செய்யாறு, வந்தவாசி, ஆரணி ஆகிய மூன்று சட்டமன்றத் தொகுதிகளில் முன்னாள் மாநிலத் தலைவர் கிருஷ்ணசாமியின் ஆதரவாளர்கள் கணிசமான உறுப்பினர்களை சேர்த்துள்ளனர்.

## காஞ்சிபுரம் மாவட்டம்

தெற்கு, வடக்கு இரண்டு மாவட்டங்களையும் சேர்த்து சுமார் 70 ஆயிரம் பேர் இளைஞர் காங்கிரஸிற்கும், சுமார் 80 ஆயிரம் பேர் தாய் கழகத்திற்கும் சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் காஞ்சிபுரம் சிட்டிங் எம்.பி. விஸ்வநாதன், தெற்கு மாவட்டம் முழுவதிலும் சிதம்பரம் அணிக்காக சரிபாதி உறுப்பினர்களை சேர்த்துள்ளார். வடக்கு மாவட்டத்தில் சக்ரபாணி தலைமையில் வாசன் அணிக்கு கணிசமான உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆகமொத்தம் இங்கே வாசன் அணியும், சிதம்பரம் அணியும் சம பலத்தில் இருக்கிறது.

## வேலூர் மாவட்டம்

இளைஞர் காங்கிரஸுக்கும், தாய் கழகத்துக்கும் சேர்த்து சுமார் 1 லட்சம் உறுப்பினர்களுக்கு மேல் சேர்க்கப்பட்டுள்ளனர். மாவட்டத் தலைவரான பாலூர் சம்பத் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அணியில் இருந்தவர். தற்போது அவர் வாசன் அணிக்குத் தாவிவிட்டதால் வேலூர் மாவட்டம் முழுவதுமே வாசன் அணியாக உள்ளது.

## தர்மபுரி மாவட்டம்

மாநிலத் தலைவர் தங்கபாலுவின் அணியினர் சுமார் 56,000 உறுப்பினர்களை சேர்த்து மெஜாரிட்டியாக இருக்கின்றனர். அடுத்து 25,000 உறுப்பினர்களை சேர்த்து இரண்டாவது இடத்தில் இருக்கின்றனர் வாசன் அணியினர். ■